குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.11/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20–ம் தேதி புதன் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது1 பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| தந்தை பெயர் | தங்கவேல் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.09 மணி,

Complainant Govindaraju present. Advocate Mr.Munusamy present for Complainant. Accused Venu present. Advocate Mr.P.Soundararajan present for Accused.

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) இவ்வழக்கின் விபரங்கள் மற்றும் ஆவணங்கள் எனக்கு தெரியும். நான் டிப்ளமோ (Electronics and Communication Engineering) வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். இவ்வழக்கு தொடர்பான சங்கதிகள் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞருக்கு தெரியும். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞர் படிக்க நானும் படித்து தெரிந்து கொண்டேன். வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் நான் கூறியதின் அடிப்படையில் எனது வழக்கறிஞருக்கு தெரியும் என்றால் சரி.

2) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ஆவணத்தில் 3ம் பத்தியில் ஆஜர் எதிரிக்கு நான் 25.09.2022 ம் தேதி அன்று ரூ.2,00,000/– கடன் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதே ஆவணத்தில் மற்ற இடங்களில் ரூ.1,50,000/– என குறிப்பிடப்பட்டுள்ளது. தவறுதலாக இந்த வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அவ்வாறு தவறாக அனுப்பப்பட்டதற்கு மறு அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கு பின்பு தான் காசோலையை வங்கியில் செலுத்தினேன் என்றால் சரியல்ல.

3) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ஆவணத்தில் இவ்வழக்கு காசோலையை வங்கியில் வசூலுக்கு செலுத்தினேன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, மாதமும் வருடமும் குறிப்பிடப்பட்டுள்ளது தேதி குறிப்பிடப்படவில்லை. சட்ட அறிவிப்பு தேதி குறிப்பிடமால் முன் கூட்டியே தயார் செய்து காசோலையை அதன் பிறகு வங்கியில் செலுத்தினேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 03.21 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.